# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

### பிரிவு 12 ( 2008ம், அதற்கு முன் பிறந்தவர்களும்)

**விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடைகளை எழுதுதல்)**

1. விலிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? 73
2. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 46
3. விவிலியத்தின் முதல் நூலும் கடைசி நூலும் யாவை? தொடக்க நூல், திருவெளிப்பாடு
4. ஆதிப்பெற்றோரின் பெயர் என்ன? ஆதாம், ஏவாள்
5. ஆதிப்பெற்றோரின் புதல்வர்கள் யாவர்? காயின், ஆபேல்
6. ஆபெலைக் கொன்றவர் யார்? காயின்
7. நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கு எத்தனை நாட்கள் நீடித்தது? 40 நாள்
8. எகிப்தில் பார்வோன் மன்னனுக்காக இஸ்ரயேலர் கட்டிய இரு நகர்களும் எவை? பித்தோம், இராமசேசு.
9. எபிரேய பெண்களுக்கு பிரசவம் பார்க்க பார்வோனால் நியமிக்கப்பட்ட எபிரேய தாதியர் யாவர்?சிப்ரா, பூவா.
10. நைல்நதியில் பேழையில் விடப்பட்ட மோசேயை கண்டெடுத்தது யார்? பார்வோனின் மகள்.
11. எகிப்தியனைக் கொன்ற மோயீசன் எங்கு தப்பி ஓடினான்? மிதியானுக்கு
12. மோயீசனின் மனைவியின் பெயர் என்ன ? சிப்போரா
13. கடவுள் எகிப்தின்மேல் எத்தனை பெரும் துன்பங்களை அனுப்பினார் ? பத்து
14. கடவுள் எகிப்தின் மேல் அனுப்பின 10 பெருந்துன்பங்களும் எவை?
    1) தண்ணீர் இரத்தமயமாதல்,
    2) நிலப்பரப்பு முழுவதும் தவளையால் நிரப்பப்பட்டன,
    3) கொசுக்கள் தொல்லை,
    4) ஈக்கள் தொல்லை,
    5) எகிப்தியரின் கால்நடைகள் சாவு,
    6) மனிதர் மேலும், விலங்குகள் மேலும் கொப்புளங்கள் உண்டாயின,
    7) கல்மழை,
    8) வெட்டுக்கிளிகள் தொல்லை,
    9) மூன்று நாள் காரிருள்,
    10) எகிப்து நாட்டின் எல்லா ஆண்பால் தலைப்பிறப்பையும், விலங்கினங்களின் அனைத்து ஆண்பால் தலையீற்றுக்களையும் ஆண்டவர் சாகடித்தார்.
15. கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு பாலைவனத்தில் உணவாக என்ன கொடுத்தார்? மன்னா, காடை
16. புதிய ஏற்பாட்டில் உள்ள மொத்த நூல்கள் எத்தனை? 27
17. புதிய ஏற்பாடு நூல்கள் யாவை?

    ☐ நற்செய்திகள்

    ☐ திருத்துர்தர் பணி (அப்போஸ்தலர் பணி)

    ☐ புனித பவுலின் 13 திருமுகங்கள்

    ☐ மற்ற சீடர்களின் 8 திருமுகங்கள்

    ☐ திரு வெளிப்பாடு

18. புனித பவுலடியார் எழுதிய திருமுகங்கள் எத்தனை? அவை யாவை? 13 திருமுகங்கள். உரோமையர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர், பிலமோன், 1 தெசலோனிக்கர், 2 தெசலோனிக்கர், 1 திமோத்தேயு, 2 திமோத்தேயு, தீத்து
19. தூய பவுல் பிறந்த நகர் எது? தர்சு.
20. தூய பவுல் யாரிடமிருந்து சட்டத்தைக் கற்றிருந்தார்? எருசலேமில் புகழ்பெற்ற திருச்சட்ட ஆசிரியர் கமாலியேலிடமிருந்து.
21. தலைமைக் குருவிடம் அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொண்டு தமஸ்குவை நெருங்கிய போது சவுலுக்கு என்ன நடந்தது? திடீரென வானத்தில் தோன்றிய ஒரு ஒளி அவரைச் சூழ்ந்து வீசியதும் அவர் தரையில் வீழ்ந்தார், அதன் பின் அவர் தனது பார்வையை இழந்தார்.
22. சவுலின் மனமாற்றத்திற்கு காரணம் என்ன? உயிர்த்த இயேசுவினால் ஆட்கொள்ளப்பட்டதினால்.
23. சவுல் யாரிடம் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்? அனனியாவிடம்.
24. தூய பவுல் தனது முதலாவது திருப்பயணத்தை எங்கிருந்து ஆரம்பித்தார்? சீரியா அந்தியோக்கியாவிலிருந்து.
25. தூய பவுல் தனது இரண்டாவது மறைதூதுப் பயணத்தை எப்போது யாருடன் ஆரம்பித்தார்? கி.பி. 50 - 52 இடையில் சீலாவுடன் ஆரம்பித்தார்.
26. தூய பவுல் தனது இரண்டாவது மறைதூதுப் பயணத்தை எங்கு ஆரம்பித்து எங்கு நிறைவு செய்தார்? சீரியா அந்தியோக்கியாவில் ஆரம்பித்து எருசலேமில் நிறைவு செய்தார்.
27. தூய பவுல் தனது மூன்றாவது மறைதூதுப் பயணத்தை எப்போது ஆரம்பித்தார்? கி.பி. 53 - 57ல்.
28. தூய பவுல் எங்கு வைத்து கைது செய்யப்பட்டார்? எருசலேம் தேவலாயத்தில்.
29. தூய பவுல் எவ்வாறு கொலை செய்யப்பட்டார்? சிரம் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.
30. புதிய ஏற்பாட்டில் அதிக நூல்களை எழுதிவயவர் யார்? தூய பவுல்.
31. தூய பவுலின் சிறைக்கூட மடல்கள் எவை? கொலோசையர், பிலிப்பியர், பிலமோன்.
32. திருத்துவத்தின் மூன்று ஆட்கள் யார்? தந்தை, மகன், தூய ஆவியார்
33. அருளடையாளங்கள் எத்தனை? அவை எவை? 7, திருமுழுக்கு, உறுதிபூசுதல், நற்கருணை, ஒப்புரவு, நோயில் பூசுதல், குருத்துவம், திருமணம்
34. அழியாத முத்திரை வழங்கும் அருள் அடையாளங்கள் எவை? திருமுழுக்கு, உறுதிபூசுதல், குருத்துவம்
35. தூய ஆவியார் வழங்கும் கொடைகள் எவை? ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தேவபயம்
36. தூய ஆவியாரின் கனிகள் எவை? அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்
37. ஏழு தலையான பாவங்களும், புண்ணியங்களும் எவை,
    1) அகங்காரம் - தாழ்மை
    2) கோபம் - பொறுமை
    3) மோகம் - கற்பு
    4) பேராசை - தாராளகுணம்
    5) பொறாமை - பிறர்சினேகம்
    6) போசனைப் பிரியம் - மட்டுக்குட்பட்ட உணவு
    7) சோம்பல் - சுறுசுறுப்பு
38. திருமுழுக்கு யோவானின் பெற்றோர்கள் யார்? சக்கரியா, எலுசபேத்
39. திருமுழுக்கு யோவான் உண்ட உணவு யாது? வெட்டுக்கிளி, காட்டுத்தேன்
40. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? திருமுழுக்கு யோவானிடம்

41. திருமுழுக்கு யோவானின் பணி என்ன?
1) ஆண்டவருக்காக மக்களை தயார்படுத்துவது.
2) பாவ மன்னிப்புக்காக திருமுழுக்கு கொடுப்பது.
3) இயேசு கிறிஸ்துவை அடையாளம் காட்டி, அவர் யார் என்பதை மக்களுக்கு அறிவிப்பது.

42. திருமுழுக்கு யோவான் எவ்வாறு இறந்தார்? அவர் ஏரோதினால் சிறைபிடிக்கப்பட்டு தலை வெட்டப்பட்டு கொல்லப்பட்டார்.
43. இறுதி இராவுணவின் போது இயேசு உருவாக்கிய இரண்டு திருவருட்சாதனங்கள் யாவை? நற்கருணை, குருத்துவம்
44. இறுதி இராவுணவின் போது இயேசுவின் மார்புப்பக்கம் சாய்ந்திருந்த சீடர் யார்? யோவான்
45. இயேசுவைக் காட்டிக்கொடுத்தவர் யார்? யூதாஸ் ஸ்கரியோத்து
46. யூதாசுக்கு பதிலாக திருத்தூதராக தெரிவு செய்யப்பட்ட திருத்தூதர் யார்? மத்தியா
47. இயேசுவை கைது செய்த போது சீமோன் பேதுரு யாரின் காதை வெட்டினார்? தலைமைக் குருவின் பணியாளனாகிய மால்குவின் காதை வெட்டினார்.
48. இயேசுவிற்கு பதிலாக விடுதலை செய்யப்பட்ட சிறைக் கைதி யார்? பரபாஸ்.
49. இயேசுவிற்கு சிலுவை மரணத் தீர்ப்பை அளித்தவர் யார்? ஆளுநர் பிலாத்து.
50. இயேசு தனது சிலுவையை சுமந்து செல்ல உதவியவர் யார்? சீரேன் ஊர் சீமோன்.
51. இயேசுவை சிலுவையில் அறைந்த இடம் எது? மண்டையோடு எனுமிடத்தில்.
52. இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டவர்கள் யாவர்? இரு கள்வர்கள்.
53. சிலுவையில் தொங்கவிடப்பட்ட INRI என்பதன் அர்த்தம் என்ன? நசரேத்தூர் இயேசு யூதரின் அரசன்.
54. சிலுவையில் தொங்கிய கள்வரில் நல்ல கள்வனுக்கு இயேசு என்ன கூறினார்? ‘இன்றே நீ என்னுடன் பேரின்ப வீட்டில் இருப்பாய்’.
55. சிலுவையில் இயேசு கூறிய இறுதி வார்த்தைகள் எவை?

1) ‘என் இறைவா, என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்’
2) ‘தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை.
3) ‘நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்கு சொல்லுகிறேன்’
4) ‘தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்’
5) ‘அம்மா, இவரே உம் மகன், இவரே உம் தாய்’
6) ‘தாகமாயிருக்கிறது’
7) ‘எல்லாம் நிறைவேறிற்று’

56. இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய முன்வந்தவர் யார்? அரிமத்தியா ஊர் யோசேப்பு.
57. இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய அரிமத்தியா ஊர் யோசேப்பு யாரிடம் அனுமதி பெற்றார்? பிலாத்துவிடம்.
58. இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சியானவர் யார்? மகதலா மரியா.
59. இயேசு தான் உயிருடன் இருப்பதை காட்டிய சந்தர்ப்பங்கள் 3 தருக.

1) பாஸ்கா ஞாயிறன்று எம்மாவுஸ் சீடருக்கு காட்சி கொடுத்தல்,

2) பாஸ்கா ஞாயிறன்று மாலையில் திருத்தூதருக்கு தோன்றி ‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக’ எனக் கூறி பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை கொடுத்தமை,
3) திருத்தூதருக்கு காட்சி கொடுத்த போது தோமா அங்கிருக்கவில்லை, அதன்பின் 8 நாட்களுக்கு பின் மீண்டும் இயேசு காட்சி கொடுத்து தோமாவின் அவநம்பிக்கையை நீக்கியமையும் தோமா தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியமையும்.

60. இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் விண்ணேற்றம் அடைந்தார்? 40
61. அப்பம் பிட்கும் போது உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தை கண்டுகொண்ட சீடர்கள் யார்? எம்மாவுஸ் சீடர்கள்.
62. இயேசு எத்தனை வயதில் இறந்தார்? 33
63. இயேசு எத்தனை வயதில் நற்செய்திப்பணியைத் தொடங்கினார்? 30
64. சிலுவையடியில் நின்ற இயேசுவின் சீடர் யார்? யோவான்
65. திருஅவையை ஏற்படுத்தியது யார்? இயேசுக்கிறிஸ்து
66. இயேசு திருஅவையை ஏற்படுத்தி அதன் தலைவராக யாரை நியமித்தார்? திருத்தூதரான பேதுருவை
67. குருத்துவம் எவ்வகைப்படும்? பணிக்குருத்துவம், பொதுக்குருத்துவம்
68. திருமுழுக்கின் மூலம் நாம் எல்லோரும் அடையும் குருத்துவம் எது? பொதுக்குருத்துவம்
69. திரு அவையின் சிறப்புப் பண்புகள் எவை? ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்.
70. கிறிஸ்தவர்கள் எமது ஆன்மீக உணவு எது? நற்கருணை.
71. முதல் முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து பழைய ஏற்பாட்டு காலக்குரு யார்? மெல்கிசேதேக்.
72. நற்செய்தியாளர் நால்வரும் குறிப்பிட்ட கிறிஸ்து நிகழ்த்திய ஒரோயொரு அருளடையாளம் எது? அப்பங்களைப் பலுகச்செய்தல்.
73. பெரிய இறைவாக்கினர்களின் பெயர்களைத் தருக? எசாயா, எரேமியா, எசேக்கியல்.
74. சிறிய இறைவாக்கினர்களின் பெயர்களைத் தருக? ஓசேயா, யோவேல், ஆமோஸ் யோனா, மீக்கா, நாகூம், செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி
75. லூக்கா நற்செய்தியின் அடையாளம் என்ன? எருது.
76. லூக்கா நற்செய்தியாளர் எழுதிய இரு நூல்கள் எவை? லூக்கா நற்செய்தி, திருத்தூதர் பணிகள்
77. யோவான் நற்செய்தியின் அடையாளம் என்ன? கழுகு
78. ‘‘ஆண்டவரே, நீரே மெசியா, நீரே இறைமகன், நீரே உலகிற்கு வரவிருந்தவர் என நம்புகிறேன்’’ என்று கூறியவர் யார்? மார்த்தா
79. “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று கூறியவர் யார்? திருத்தூதர் பேதுரு
80. “நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்’’ என்று கூறியவர் யார்? திருத்தூதர் தோமா
81. “நான் ஆண்டவரைக் கண்டேன்” என்று சீடர்களிடம் கூறி உயிர்த்த ஆண்டவருக்கு சாட்சியளித்தவர் யார்? மகதலா மரியா
82. ‘‘ரபி! நீர் இறைமகன், நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்” என்று இயேசுவைப் பார்த்துக் கூறியவர் யார்? நத்தனியேல்
83. “உங்களுக்கு அமைதி உரித்தாகுக” என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது? உயிர்த்த இயேசுவால் அவருடைய சீடர்களுக்கு
84. கிரேக்கர்கள் இயேசுவைச் சந்திக்க விரும்பிய போது அவர்களை இயேசுவிடம் கூட்டிச் சென்ற சீடர்கள் யாவர்? பிலிப்பு, அந்திரேயா

85. இயேசு வளர்ந்த ஊராகிய நசரேத் தொழுகைக்கூடத்தில் வாசிக்க எழுந்தபோது, அவருக்குக் கொடுக்கப்பட்ட சுருளேடு எது? இறைவாக்கினர் எசாயாவின் சுருளேடு
86. ‘‘எதிரே இருக்கும் ஊருக்குள் போங்கள். அதில் நுழைந்ததும் இது வரை யாரும் அமராத ஒரு கழுதைக்குட்டி கட்டி வைக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள்’’ என்று இயேசு தம் சீடரை எங்கு அனுப்பினார்? பெத்பகு, பெத்தானியா ஆகிய ஊர்களுக்கு
87. தாலந்து உவமை வாயிலாக இயேசு தரும் படிப்பினை என்ன? எமது திறமைகளை விருத்தி செய்து பொறுப்புக்களில் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும்
88. இறைவார்த்தையை கேட்டு, அதன்படி வாழுதல் பற்றி இயேசு கூறிய உவமை எது? விதைப்பவன் உவமை
89. இறந்த இயேசுவை அடக்கம் செய்யும் வேளையில் வெள்ளைப்போளமும் சந்தணத்தூளும் கலந்த நறுமணத்தை கொண்டு வந்தவர் யார்? நிக்கோதேம்
90. மத்தேயு எங்கிருக்கும் போது இயேசு அவரை அழைத்தார்? சுங்கச் சாவடியில் வரி வசூலித்துக்கொண்டிருக்கும் போது
91. சென்ம பாவத்தை கழுவும் அருளடையாளம் எது? திருமுழுக்கு
92. திருமுழுக்கில் பயன்படும் பொருட்கள் எவை? தண்ணீர், மெழுகுதிரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை
93. திருமுழுக்கில் பயன்படும் வெண்ணிற ஆடையின் அர்த்தம் என்ன? தூய்மை
94. குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை? ஒப்பரவு, நோயிற்பூசுதல்
95. மனம் வருந்துவதற்கான அருளடையாளம் எது? ஒப்புரவு
96. செபமாலையின் போது கூறப்படும் தேவ இரகசியங்கள் எவை? மகிழ்ச்சியின் தேவ இரகசியம், துக்க தேவ இரகசியம், மகிமையின் தேவ இரகசியம், ஒளியின் தேவ இரகசியம்
97. அன்னை மரியாளின் அமல உற்பவத் திருவிழா திருச்சபையால் எப்போது கொண்டாடப்படுகின்றது? மார்கழி 8
98. ‘‘பெண்களுக்குள் நீர் ஆசீர் பெற்றவர், உம் வயிற்றில் வளருமம் குழந்தையும் ஆசீபெற்றதே’’ என யாரால் யாருக்கு கூறப்பட்டது? எலிசபேத்தினால் மரியாளுக்கு
99. ‘‘உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்’’ யாரால், யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது? சிமியோனால் மரியாவுக்கு குழந்தை யேசுவை கோவிலில் அர்ப்பணித்த போது
100. ‘‘அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்’’ என்று கூறி இயேசுவின் பணிவாழ்வைத் தொடக்கி வைத்தவர் யார்? இயேசுவின் தாய் மரியா

## பத்துக்கட்டளைகளும் எவை? (10 கட்டளைகளை வரிசைக்கிரகமாக மனம் பாடம் செய்தல் வேண்டும்)

1. நானே உன் கடவுளாகிய ஆண்டவர், என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. (விடுதலைப் பயணம் 20:2-3)
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. (விடுதலைப் பயணம் 20:7)
3. ஓய்வு நாளை தூயதாக கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு (விடுதலைப் பயணம் 20:8)
4. உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும் படி உன் தந்தையையும் தாயையும் மதித்து நட (விடுதலைப் பயணம் 20:12)
5. கொலை செய்யாதே (விடுதலைப் பயணம் 20:13)
6. விபச்சாரம் செய்யாதே (விடுதலைப் பயணம் 20:14)
7. களவு செய்யாதே (விடுதலைப் பயணம் 20:15)
8. பொய்ச்சான்று சொல்லாதே (விடுதலைப் பயணம் 20:16)
9. பிறர் மனைவியை விரும்பாதே (விடுதலைப் பயணம் 20:17)
10. பிறருக்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே(விடுதலைப் பயணம் 20:17)

## பேச்சுப்போட்டிக்கான தலைப்பு

## ஒப்புரவு அருட்சாதனம்

மனித பலவீனத்தால் கிறிஸ்தவர்களுக்கு “தொடக்கத்தில் இருந்த அன்பு” குறைகிறது; இறைவனுடன் கொண்ட நட்புறவு முறிந்துவிடுகின்றது. எனவே, திருமுழுக்குப் பெற்ற பிறகு கட்டிக்கொண்ட பாவங்களை மன்னிக்க இயேசு ஒப்புரவு எனும் தனித் திருவருட்சாதனத்தை நிறுவினார். “மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்” எனும் விருது வாக்கியத்தோடு இயேசு தம் மீட்புப் பணியை தொடங்கினார்.

பாவங்களை வெறுத்து மனம் வருந்துவதோடு நில்லாது, பாவிகள் அனைவரும் இறைவனோடு ஒப்புரவாக வேண்டுமென்று இயேசு கற்பித்தார்.

ஒப்புரவு எனும் திருவருட்சாதனத்தில், இறைமக்கள் “இறைவனுக்கெதிராகத் தாம் செய்த பாவங்களுக்கு, அவரது இரக்கத்தால் மன்னிப்புப் பெறுகிறார்கள்; அத்தோடு அவர்களின் பாவங்களால் புண்படுத்தப்பட்டதும், தனது அன்பாலும், மாதிரியாலும், மன்றாட்டாலும் அவர்களின் மனந்திரும்புதலுக்காக உழைப்பதுமான திரு அவையோடு மறு உறவு பெறுகிறார்கள்.” என

வத்திக்கான் சங்க ஏடு குறிப்பிட்டுரைக்கிறது.

இரக்கம் நிறை இறையருளால் ஒப்புரவு வழியை நாடும் ஒருவர், நம்மை முதலில் அன்பு செய்தவரான பரம தந்தையிடம் , நமக்காகத் தம்மையே கையளித்த கிறிஸ்துவிடம் நம்மீது ஏராளமாய் பொழியப்படும் தூய ஆவியிடம் திரும்பி வருகிறார். இவ்வாறு இறைவனோடு ஒப்புரவாகும் நாம் திரு அவையோடும், திரு அவையின் உறுப்புக்களான நம் சகோதரரோடும் ஒப்புரவாகின்றோம்.

தங்களிடம் கனமான பாவம் இருப்பதாக உணரும் நம்பிக்கையாளர் கடவுளோடும் திரு அவையோடும் ஒப்புரவு ஆவதற்கான ஒரே சாதாரண வழி தனிப்பட்டஇ முழுமையான பாவ அறிக்கையும் பாவமன்னிப்பும் ஆகும்.

ஒப்புரவு திருவருட்சாதனத்தின் முக்கிய பிரிவுகள்:

மனம் வருந்தல், பாவ அறிக்கை, பாவத்திற்கான தண்டனை, குரு அளிக்கும் பாவ மன்னிப்பு என்பவையாகும். மனந்திரும்பும் பாவிக்கு இறைவனோடு ஒப்புரவாகும் அருள் திருஅவையின் வழியாகத்தான் கிடைக்கிறது.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

இயேசுவே உந்தன் வார்த்தையால் வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில் கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் என் உள்ளம் மலர்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே

தீமைகள் தகர்ந்தொழிந்திடும் உன் வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுய நலன்களும் இங்கு வீழ்ந்து ஒழிந்திடுமே (2)
நீதியும் அன்பு நேர்மையும் பொங்கி நிறைந்திடுமே
இயேசுவே என் தேவனே உன் வார்த்தை ஒளிர்ந்திடுமே

நன்மையில் இனி நிலைபெறும் என் சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும் ஒன்றாகும் நிலைவருமே (2)
வென்றிடும் புது விந்தைகள் உன்னைப் புகழ்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுமே

## ஓவியப் போட்டிக்கான தலைப்பு

**இறுதி இராவுணவு**